★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 19 ருத். 21 இதழ் 142

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 3—7—83

## 'சற்றடே றிவியூ' - 'சுதந்திரன்' காரியாலயங்களுக்குச் 'சீல்!'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "சட்டர்டே றிவியூ" ஆங்கிலவாரப்பத்திரிகை "சுதந்திரன்" ஆகிய பத்திரிகைகளின் காரியாலயங்களுக்கு நேற்று முன்தினமிரவு பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. 'சுதந்திரன்' ஆசிரியர் கோவை மகேசன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் பொதுப் பிரமாணங்களின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி விடுத்த பணிப்பின் மீது பொலிஸ் மா அதிபர் இப் பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்க அறிக்கையொன்று கூறுகின்றது.

நேற்றுமுன் தினம் 'யாழ்தேவி' ரயில் பெட்டிகளும் இருபஸ் வண்டிகளும் எரிக்கப்பட்ட தையடுத்து இப்பத்திரிகைகள் இன உணர்ச்சியையும் வன்செயல்களையும் தூண்டிவிடக் கூடுமென்று கருதியே இவை தடை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அறிவித்தல் கூறியது.

தமிழ் ஈழவிடுதலை அணியின் நடவடிக்கைகள் பற்றி உண்மைக்குப்புறம்பான செய்திகளை இவ்விருபத்திரிகைகளும்

[8ம் பக்கம் பார்க்க]

# ● தமது சொந்த மண்ணிலே தமிழர் படுகொலையை தடுத்து நிறுத்துங்கள்!

## திருகோணமலை நிலைபற்றி அமிர் ஜனாதிபதிக்குத் தந்தி

(யாழ்ப்பாணம்)

"திருகோணமலையில் அப்பாவித் தமிழ் மக்கள் தமது சொந்தப் பூமியிலேயே காடையர்களால் ஆயுதப்படையின் உதவியுடன்கொலைசெய்யப்படுவதை உடனடியாகத்தடுத்து நிறுத்துங்கள்" என்று வலியுறுத்தும் அவசரத் தந்தி ஒன்றை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அனுப்பிவைத்துள்ளார்.

திருகோணமலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்துத் திரும்பியபின்னரே திரு. அமிர்தலிங்கம் இந்தத் தந்தியை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இரு தரப்பிலும் நடைபெற்றுள்ள வன்செயல்கள் பற்றிய விபரங்கள் முற்றுமானவை தவறானவை. 16 பேருக்குமேல் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழர்.

சுமார்பேர்40வெட்டுக்காயங்களுடனும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடனும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 35 பேருக்குமேல் தமிழர்கள்.

150 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 95

(8-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ரயில் சேவை இல்லை!

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் காங்கேசன்துறை-கொழும்பு ரயில் சேவை முற்றாகநடைபெறவில்லை.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட 'இன்டசிற்றி' ரயில் அனுராதபுரத்துடன் சேவையை நிறுத்திக் கொண்டது.

'யாழ்தேவி' ரயில் பெட்டிகள் எரிப்புச் சம்பந்தமாக விசாரணைசெய்ய யாழ். வந்துள்ள விசாரணைக்குழுவின் அறிக்கை வருமவரை வடபகுதிக்கான ரயில் சேவை எதுவும் நடைபெறமாட்டாதென்று ரயில்வே பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

தீச்சம்பவத்தின்போது புகையிரதத்தில் ஏற்றுவதற்காக புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான சுருட்டுப் பொதிகள் தீயினால் எரிந்துள்ளன மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய கோழிப்பண்ணைகளொன்றை வைக்கப்பட்டிருந்த பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான கோழித்தீனி மூடைகளும் நாசமாகியுள்ளன.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் பதற்றநிலையைத் தணித்து அமைதியை நிலை நிறுத்தும் நடவடிக்கைகளில் புதிய இணைப்பு அதிகாரியான கடற்படைத் தளபதி றெயார் அட்மிரல் அசோகா டி சில்வா ஈடுபட்டுள்ளார். அங்குமிங்குமாகச் சிறு சிறு சம்பவங்கள் நடைபெற்றபோதிலும்,குறிப்பிடத்கூடிய வன்செயல்கள் நடைபெறவில்லை என நமது நிருபர் அறிவிக்கிறார்.

பதினைந்து சமாதானக்குழுக்களின் இணைப்புசபை திருமலை மாவட்ட அமைச்சர் அலுவலகத்தில் கூடி நிலைமையை ஆராய்ந்தது. விசேடசிரேஷ்ட பொலிஸ் அதிபர் திரு தர்மதாச சில்வாவுங்கலந்துகொண்டார்.

ஊரடங்கு சட்டத்தின் நேரத்தைப் படிப்படியாகக் குறைப்பதென்றும் இன்று முடிவு செய்யப்பட்டது.

நேற்று பிற்பகல் 2 மணியிலிருந்து இன்று காலை 8மணி

[8-ம் பக் கம்பார்க்க]

## உபதபால் நிலையத்தில் துப்பாக்கி முனையில் முத்திரை பணம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

உபதபால் நிலையத்தில் கடமையிலிருந்த இரு இளம் பெண் ஊழியர்களை இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும், பெறுமதி வாய்ந்த முத்திரைகளையும் கொள்ளை அடித்துள்ளனர்.

யாழ். நீதிமன்ற வளவின் அருகாமையிலுள்ள சம்பல் வீதியில் உள்ள உபதபால் நிலையத்தில் நேற்று நண்பகல் இக்கொள்ளை நடைபெற்றது.

சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் திடீரென இந்த உபதபால் நிலையத்துக்குள் புகுந்து அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த இரு பெண் ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி பணம்

[8-ம் பக்கம் பார்க்க]

## புத்தூரிலும் மற்றொரு பஸ்ஸுக்குத் தீ!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மேலும் ஒரு பஸ்ஸுக்கு இனந்தெரியாத நபர்களால் வைக்கப்பட்ட தீ உரியநேரத்தில் அணைக்கப்பட்டதால் நான்கு இருக்கைகள் மட்டும் எரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் புத்தூர் சந்தியில் இத்தீவைப்புச் சம்பவம் நடைபெற்றது.

கோண்டாவில் டிப்போவை சேர்ந்த 23 ஸ்ரீ 2973 இலக்கம் கொண்ட இப்பஸ் நேற்று முன்தினம் இரவு சங்கானையிலிருந்து சாவகச்சேரிக்குப் புறப்பட்டது.

இரவு 7 மணியளவில் புத்தூர் சந்தியில் நான்கு இனந்

(8ம் பக்கம் பார்க்க)

## 13வது சர்வோதய பரிசிழுப்பு முடிவுகள்

1-7-83 அன்று ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியிலுள்ள நயினாதீவு கிராமத்தில் குலுக்கப்பெற்ற 13வது சீட்டிழுப்பு முடிவுகள்:

1ம் பரிசு: 09280
தொலைக்காட்சிப் பெட்டி (17 அங்குலத் திரை)

2ம் பரிசு: 06119
சிங்கர் தையல் மெசின்

3ம் பரிசு: 00323
கிருமி நாசினி தெளிகருவி

ரூபா 250/- கொண்ட ஏழு ஆறுதல் பரிசுகள்:

16587 12932 05911 15086
12326 14290 18947

மூன்று மாதங்களுக்குள் பரிசுகள் கோரப்படாவிடில் பரிசுச் சீட்டு செல்லுபடியற்றதாகும்.

[7835]

## யோகேஸ் சென்று பார்த்தார்

(கல்கிஸ்ஸை)

அவசரகால விதியின் கீழ் தடுப்புக்காவலில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருக்கும் தமிழ் ஈழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தையும், த. ஈ. விடுதலை அணியின் செயலாளரும், 'சுதந்திரன்' ஆசிரியருமான கோவை மகேசனையும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற பிரதிநிதி திரு வெ. யோகேஸ்வரன் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சென்று பார்த்தார்.

யாழ்ப்பாணம் டி. ஐ ஜி. யின் உத்தரவைப் பெற்றே யோகேஸ் சென்று பார்வையிட்டார்.

அன்பளிப்பு
பவானி
பேணிச்சர்
பலஸ்
75 (121),
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
சகல தளபாடமும்
இங்கு
பெற்றுக்கொள்ளலாம்
இன்று மாலை 4-30க்கு
வீரசிங்கம்
மண்டபத்தில்
ஷோபா,கிரியேஷன்ஸ்
வழங்கும்
இலங்கைவேந்தன்
குழுவினரின்



சட்டமாணவர்கள் பங்குபற்றும்
தூக்குமேடை
[7826]

# இந்தியாவின் மூன்று மாநிலங்களில்
# மண்சரிவு! பலத்த மழை!

## 17பேர் பலி!

புதுடில்லி, ஜூலை, 2
இந்தியாவின் மூன்று மாநிலங்களில் பலத்த மழையினாலும், மண் சரிவுகளினாலும் பலர் பலியாகியுள்ளனர். கர்நாடகம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பெய்த பலத்த மழைக்கும், மண்சரிவுகளுக்குமே பலர் பலியாகியுள்ளனர்.

கர்நாடகமாநிலத்தில் இடம்பெற்ற மண் சரிவுக்கு 6 பேர் பலியாகியுள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் 9 பேரும், ராஜஸ்தான் மாநிலத்தில் 2 பேரும் மண் சரிவுக்குப் பலியாகியுள்ளனர்.

இம்மாநிலங்களில் இடம்பெற்ற பெரு மழையினாலும், மண் சரிவுகளினாலும் ரயில் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளன.

இந்த மூன்று மாநிலங்களிலும் உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாநில முதலமைச்சர்கள் அரசின் உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட இடங்களை கர்நாடக, ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களின் முதலமைச்சர்கள் சென்று பார்வையிட்டு, மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். (வெ)

## சஞ்சீவரெட்டி உடல்நிலை தேறிவருகிறது

சென்னை, ஜூலை 2
சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனை யொன்றில் சிகிச்சைபெற்றுவரும் முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டியின் உடல்நிலை தேறிவருவதாக அறிவிக்கப் பட்டது. (வெ)

## கனேடியப் பிரதிப் பிரதமர் இன்று புதுடில்லி விஜயம்

புதுடில்லி, ஜூலை. 2
கனடாவின் பிரதிப் பிரதமரும், வெளிநாட்டமைச்சருமான திரு.ஜோ ஜே. மகீலன் இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இருபது ஆண்டுகளில் கனடாவின் அமைச்சரொருவர் புதுடில்லி வருவது இதுவே முதற்தடவையாகும்.

திரு. மகீலன் இந்தியாவில் நான்கு நாள் தங்கியிருந்து பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, வெளிநாட்டமைச்சர் திரு பி. வி நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

## கருத்து வேற்றுமை

லண்டன், ஜூலை 2
உலகப் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் 'அமடாச்' மகாநாட்டின் குழுக்களுக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## சர்வதேச திரைப்பட விழாவில் தமிழ்ப்படம்

மாஸ்கோ, ஜூலை, 2
மாஸ்கோவில் இம்மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவில் 'ஏழாவது மனிதன்' என்ற தமிழ்த் திரைப் படமும் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்பட விழாவில் நிச்சார்ம் அட்டன் பரோவினால் தயாரிக்கப் பட்டு, எட்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற 'காந்தி' திரைப்படமும் திரையிடப்படவுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். (வெ)

## நாவலாசிரியர் காலமானார்

புதுடில்லி, ஜூலை, 2
பிரபல மலையாள நாவலாசிரியர் திரு பி. கேசவதேவ் காலமானார். இறக்கும்போது இவருக்கு 80 வயதாகும்.

இவர் எழுதிய நாவல் ஒன்றுக்கு சாகித்திய அக்கடமி விருதும் கிடைத்துள்ளது.

## ஜம்முகாஷ்மீர் தேர்தல் மோசடி

ஸ்ரீநகர், ஜூலை 2
ஜம்மு காஷ்மீர் தேர்தலில் பெருமளவு மோசடி இடம் பெற்றுள்ளதாக இந்திரா காங்கிரஸ் உறுப்பினரொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தஸ்தாவேஜுகளில் தவறுதல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். [வெ]

## இந்தியாவின் முதலாவது சுங்கத்தீர்வையற்ற கடை

புதுடில்லி, ஜூலை 2
இந்தியாவின் முதலாவது சுங்கத் தீர்வையற்ற கடை நேற்றுப் புதுடில்லியில் திறந்து வைக்கப்பட்டது. பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலும் சுங்கத்தீர்வையற்ற கடைகள் திறந்துவைக்கப்படவுள்ளன. (வெ)

## "இனவாதத்தை எதிர்த்து மக்கள் போராடவேண்டும்"
### இந்திய ஜனாதிபதி கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை,2
"இந்திய மக்கள் இனவாதத்தையும், வகுப்புவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். நாட்டின் அமைதியைச் சீர்குலைக்க சில விஷமிகள் முயன்று வருகின்றனர்."

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"குறுகிய பிராந்திய மனப்பான்மை இந்திய மக்கள் கைவிடவேண்டும் நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு மக்கள் உழைக்கவேண்டும்.

"எம்மிடையேயுள்ள வேற்றுமைகளைக் கைவிட்டு நாட்டின் நலனை நோக்கமாகக் கொண்டு மக்கள் செயல்பட வேண்டும்" என்றார். (வெ)

## கோதுமை ஏற்றுமதி

புதுடில்லி, ஜூலை 2
இந்தியா கோதுமை விதைகளையும், உருளைக்கிழங்கையும் பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்யவுள்ளது.

## மல்லாகம் சட்டத்தரணிகள் 7ம் திகதி பகிஷ்கரிப்பு

(மாவிட்டபுரம்)
நீதியரசர்கள் வீடுகளுக்கு முன்புநடந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து இம்மாதம் 7ம் திகதி மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் கடமைக்குச் செல்லாது பகிஷ்கரிக்க உள்ளனர்.

நீதியரசர்கள் வீடுகளுக்கு முன்பு நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து ஆராய ஏற்கனவே கூடிய மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் இதனைக் கண்டித்து ஒருநாள் கடமையைப் பகிஷ்கரிப்பதென முடிவுசெய்திருந்தனர்.

இதனை எப்போது நடத்துவது என்பதை ஆராய மீண்டும் மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கூடிய போது இம்மாதம் 7ம் திகதி இந்தப்பகிஷ்கரிப்பை மேற்கொள்வதென முடிவுசெய்யப் பட்டது.

அன்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்திற்குச்சென்று நீதிமன்றம் ஆரம்பமாகும் வேளை நீதிமன்றத்திற்கு முன்பாகக் குழுமிநின்றுவிட்டு பின்னர் வழக்குகள் எதிலும் ஆஜராகாது கடமையைப் பகிஷ்கரித்துத்திரும்பிவிடுவதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பருத்தித்துறை சாவகச்சேரி, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி வவுனியா, மன்னார் முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளது ஒத்துழைப்பைக் கோருவதெனவும் முடிவு எடுக்கப்பட்டது. (ஈ)

## தீக்குளிக்க முயன்றவர் தடுக்கப்பட்டார்

சென்னை, ஜூலை 2
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு சேதுராமன் தீக்குளிக்க முயன்றபோது பொலிசாரால் தடுத்து நிறுத்தப் பட்டார்.

தாழ்த்தப்பட்ட ஒருவரை சாதியின் பெயரைச் சொல்லி சட்டமன்ற உறுப்பினரொருவர் பேசியதைக் கண்டித்தே இவர் தீக்குளிக்க முயன்றார். [வெ]

## யாழ். நகரில் நடை பாதைவியாபாரம் அப்புறப்படுத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வந்த நடைபாதை வியாபாரிகள் நேற்று யாழ். பொலிசாரால் எச்சரிக்கை செய்யப் பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர்.

வியாபாரிகள் தங்கள் பொருட்களை வைத்து விற்பனை செய்த மரப்பெட்டி தளபாடங்களை பொலிசார் பறிமுதல் செய்துள்ளனர்.

யாழ் மின்சார நிலைய வீதியிலும் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும் வியாபாரம்செய்துவந்த அங்காடி வியாபாரிகளுக்கே இக்கதி ஏற்பட்டது.

அங்காடி வியாபாரிகளுக்கென, யாழ் முனீஸ்வரன் வீதி, முற்றவெளி, திறந்தவெளி அரங்கு வீதி ஓரங்களில் தற்காலிக கொட்டகைகள் போட்டுக் கொடுப்பதெனக் கடந்த யாழ். மாநகரசபை மன்றக் கூட்டங்களில் தீர்மானங்கள்கூட நிறைவேற்றப்பட்டிருந்தும் இதுவரை அது அமைக்கப்படவில்லை.

இந்த, சிறியதள பண்டிகைக் காலங்களில் கொழும்பு போன்ற இடங்களிலிருந்து கூட அங்காடி வியாபாரிகள் நூற்றுக்கணக்கானோர் யாழ். நகருக்குப் படையெடுத்து வந்திருக்கின்றனர். அவர்களுக்கென்றொரு தனியிடம் இதுவரை காலமும் ஒதுக்கப்படாதது பெரும் குறையாக இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட வீதிகளில் வியாபாரம் செய்யும் அங்காடி வியாபாரிகளால், பொது மக்களுக்கும்— வாகனப்போக்குவரத்துக்கும்—பாடசாலை மாணவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதாக யாழ். மாவட்ட விசேஷ குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்குப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

## கடலில் பஸ் பாய்ந்தது!

(வேலணை)
யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்குப் பிரயாணிகளுடன் சென்ற வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் நேற்று முன்தினம் அல்லைப்பிட்டிக்குச் சமீபமாகவுள்ள கடலில் பாய்ந்தது! பஸ் கடலில் பாய்ந்தசமயம் கடல் வற்றுக இருந்தபடியாலும் பஸ் சரியாமல் அப்படியே கடலில் நேராகச் சென்று நின்றதாலும் பஸ் வண்டியில் சென்ற பிரயாணிகள் தெய்வாதீனமாக எதுவித காயங்கள் இன்றித் தப்பித்துக் கொண்டனர்.

## "அமைச்சர் ஒருவரை திருமலைக்கு அனுப்பி வன்முறை சம்பவங்களை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்" ஜனாதிபதிக்கு குமார் தந்தி

[கொழும்பு]
"திருகோணமலையில் நடைபெற்று வரும் வன்முறைச்சம்பவங்களை நேரில் ஆராய்ந்து அவற்றை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் ஒருவரை உடன் அங்கு அனுப்புங்கள்.

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு.குமார்பொன்னம்பலம் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவிற்கு அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"திருமலையிலிருந்து பலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அங்கு நடைபெற்று வரும் சம்பவங்கள்பற்றி தெரிவித்து கொண்டிருக்கின்றனர். தமிழ்மக்கள் மிகமோசமாக தாக்கப்பட்டு அவர்களின் உடமைகள் எரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

"தினமும் 24 மணிநேர ஊரடங்கு சட்ட நேரத்தில் இத்தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகிறது. இதனை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். (இ-க)

### வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை

# சிறிலங்கா குடியரசு சட்டவலுவுடையதா?

முன்னைய பாகங்களில் சனநாயகக் குடியரசு என்பது ஒருமக்கள் குழாம் ஒரு அரச சமுதாயத்தை (Polity) சிருட்டிக்க சுதந்திரமாக விரும்பித் துணிபு செய்து அந்த அரச சமுதாயத்தின் அரசமைப்புச் சட்டத்தை (யாப்பு) தயாரித்து அரசை நிறுவுவதைக் குறிக்கும்.

சிறிலங்காக் குடியரசு ஏனைய அரசசமுதாயத்தின் அரசமைப்புச் சட்டத்தின் மூலவசனம் படி 1977-ம் ஆண்டு யூலை மாதம் 21ந் திகதி நடந்த பொதுத்தேர்தலில் யூ. என். பி. கட்சி "சிறிலங்கா சனநாயக சோசலிஸ்ற் குடியரசை உருவாக்கி (To Constitute Sri Lanka...) அதற்குரிய யாப்பைத் தயாரிப்பதற்கு பணிப்பு (Mandate) தரும்படி வாக்காளர் முன்வைத்த பிரேரணைக்கு கிடைத்த மிகக்கூடுதலான அதிகப்படி வாக்களிப்பே (Over Whelming Majority) சிறிலங்காக்குடியரசு யாப்புக்கு அதிகாரம்" என்று கூறப்பெற்றிருக்கிறது.

ஆனால் இந்த மூலவசனம் வடக்குக் கிழக்கிலங்கையைப் பொறுத்த மட்டில் செல்லுபடியாகாது ஏனெனில் வடக்குக் கிழக்கு மக்கள் அந்த மைய பணிப்பு எதையும் வழங்கவில்லையே! அதற்கு மாறாக ஈழம் என்ற நாமத்தில் ஒரு தனியான குடியரசை உருவாக்கும்படியே அத்தேர்தலில் மிகப்பெரும்பான்மை வாக்குகளால் பணிப்பு விடுத்தனர்.

வேறும் சிறிலங்காக் குடியரசின் ஆள்புலம் 24 நிர்வாக மாவட்டங்கள் ஒருங்கிணைவதே என்றும் பொறிக்கப்பெற்றிருக்கிறது. மேலும் இறைமை பாரதீனப்படுத்தமுடியாதென்றும் மக்களிடமே உறைகிறதென்றும் அந்த அரசமைப்புச் சட்டம் பகர்கிறது. எனவே வடக்குக் கிழக்கைப்பொறுத்த மட்டில் சிறிலங்காக்குடியரசும் அதன் அரசமைப்புச்சட்டமும் அதிகாரம் இல்லாத சட்டவலுவற்றது. சிறிலங்காக்குடியரசிற்கு வடக்கு கிழக்கைப் பொறுத்தமட்டில் சட்டவலுவைப்பெறுவதற்கு எடுக்கக்கூடிய ஒரே ஒரு நடவடிக்கை அரசமைப்புச்சட்டத்திற்கு சாதகமான (Affirmative Votes) கொடுக்கும்படி கோரி வடக்குக் கிழக்கில் ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை (Referendum) நடாத்துவதே.

அதிகாரபீடத்தை அந்த மைய வாக்கெடுப்பை நடாத்தும்படி எவ்வாறு நிர்ப்பந்திப்பதென்ற விடயத்தை ஆராய்ந்த வடக்குகிழக்கில் குடிபதி ஒருவனை அரசியல் குற்றஞ்சாட்டி அரசியல் குற்றக் கூண்டில் நீதிமன்றம் முன் நிறுத்தும் பொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவன் நீதிபதியைநோக்கி மிகநயமாக அந்த நீதிமன்றத்திற்குதன்னை விளங்கவோ தண்டிக்கவோ நியாயாதிக்கம் இல்லை என்று ஆட்சேபனை எழுப்பலாம் அந்த ஆட்சேபனைக்கு முடிவு கூறும்படி கோரவேண்டும். நிலைமை தெட்டத்தெளிவாக இருப்பதால் ஆட்சேபனையை நிராகரிக்க முடியாது. இவ்வாறு ஒரு யாப்புமட்ட நெருக்கடியை (Constitutionl Crisis) உருவாக்கி அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுவூட்டலாம்.

அவ்வாறு அரசமைப்புச் சட்டத்திற்கு சட்ட வலுவைப் பெறுவதற்கு வடக்கிலும் கிழக்கிலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்து என்ற கோரிக்கையைவிட வேறு எந்தக் கோரிக்கையையும் தமிழ் மொழி இன மக்கள் அதிகார பீடத்திற்கு முன் வைக்கக் கூடாது ஆங்கிலத்தில் Singleness of Purpose என்று கூறுவர். சுயாட்சி என்ற குறிக்கோளை முன்வைத்தால் மற்ற எந்தக் குறிக்கோளுக்கும் இடமில்லை. வேறு குறிக்கோளையும் முன்வைத்தால் சுயாட்சி என்ற குறிக்கோள் கைவிடப்படுமாக அமையும். இந்த உண்மையை வடக்குக் கிழக்கு அரசியல்வாதிகள், முக்கியமாக தெரிவுசெய்யப்பெற்ற பிரதிநிதிகள் உணராததும் அதற்கு ஏற்பச் செயற்படாததுமே இன்றைய அரசஜன நிலைக்குக் காரணம். அரசுடன் எந்தவித ஒத்துழைப்பையும் கையாளாது மேலே விளக்கப்பெற்ற வாக்கெடுப்பை நடாத்துமாறு அதிகாரபீடத்தை நிர்ப்பந்திப்பதே சுயாட்சி பெறுவதற்கு சட்டமுறையான வழி (Constitutional Road to Self-Government)

சிறிலங்கா குடியரசு வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை சட்டவலுவற்றதுஎன்பதைஇல தத்துவ அடிப்படையில் விளக்குவோம். The State Is An Association என்று கூறுவர். ஒரு அரச சமுதாயம் ஒரு ஒன்றியம். ஒன்றியம் என்பது அநேகர் ஒன்றாகத் திரண்டு குறிப்பிட்ட ஒரு குறிக்கோளை முன்வைத்துச் செயற்படுவதாகும். அந்த ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மற்றையோரைச் சக உறுப்பினராக ஏற்கவேண்டும். அவ்வாறு சக உறுப்பினராக ஏற்பது சில தகைமைகளைக் கொண்டதாக அமையும். இத்தகைமைகளை ஆங்கிலத்தில் Liberty Fraternity and Equality என்று வர்ணிப்பர். அதாவது சுதந்திரம், சகோதரப்பான்மை, சமத்துவம் எனத் தமிழில் கூறலாம்.

சுதந்திரம் என்பது மக்கள் அரசின் அடிமை அன்று; மக்கள் உருவாக்குவதுதான் அரசு. மக்களின் விருப்பத்திற்கு அமைந்த சட்டப் பிரகாரமே அரசு நடாத்தப்பெறும். மக்களாட்சி என்ற கருத்தைக் கொண்டுவரும்.

சகோதரப்பான்மை என்பது ஒன்றியத்தின் உறுப்பினர், அதாவது அரச சமுதாயத்தின் பிரஜைகள் அல்லது குடிகள் ஒருவரை ஒருவர் சகோதரர் என்று கருதிச் செயற்படுவதைக் குறிக்கும். இந்த ஒற்றுமை உணர்ச்சியே அந்த அரச சமுதாயத்தைப் பிணைப்பது; ஒன்றாக இயங்கச் செய்வது. இந்தச் சகோதரமனப்பான்மை இல்லாவிடின் அந்த அரச சமுதாயம் எதிர் விளைவுகளையே உருவாக்கும் (Counter Productive of the objectives of the state organization) அராஜகம் என்பதுவே விளைவாகும்.

ஒரு நாட்டின் கட்டுப்பாடும் சீழ் படிவும் அதிமுக்கியமாக அமைவது அந்நாட்டின் பாதுகாப்புப்படையினரிடையேதான் ஆனால் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் பலர் இன அடிப்படையில் குரோதத்தைக் கிளப்பி அதிகாரிகளின் கட்டளையை இன அடிப்படைக் காரணங்களுக்காக நிராகரித்துச் செயற்படும் பொழுது இந்நாட்டில் சிங்கள இனம் தமிழ் இனத்தை சகோதரபான்மையுடன் கருதுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? அந்தப்பண்பு இல்லாவிடின் அந்த நாடு குடியரசு ஆகாது. பலாத்கார அரசு என்றே கூறவேண்டும். இன்று நடைமுறையில் நடப்பது என்ன? தமிழரும் சிங்களவரும் ஒரு அரசசமுதாயமாக முடியாது. சிங்களவர் தமிழரை அரச சமுதாயத்தில் ஏற்கவில்லை.

சகோதரபான்மை என்ற இப்பண்பு இல்லாத நிலைமையில் அதிஉன்னத பண்பான சமத்துவ உணர்ச்சி ஏற்படுமா? முடியவே முடியாது.

எனவே குடியரசு சமுதாயத்திற்கு அத்தியாவசியமான இம் மூன்று பண்புகளில் ஒரு பண்பாவது இம்மியளவாவது இல்லாத நிலையில் அதிகார பீடத்தில் இருக்கும் ஜனாதிபதி ஜயவர்த்தனாமீது ஏற்படும் ஒருமகத்தானபொறுப்பு தனது அரசமைப்புச் சட்டத்திற்கு வடக்குக் கிழக்கில் சாதக வாக்கைக் கோரி உடனடியாக ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துவதேயாகும்.

சோமசுந்தரம் வன்னியசிங்கம்

## கைத்தொழில் வாரம் கொண்டாடப்படும்

[மானிப்பாய்]

தொழில் திணைக்களத்தின் தொழிற்சாலைகள் பிரிவு எதிர் வரும் செப்டம்பர் மாதத்தில் 'கைத்தொழில் பாதுகாப்பு வாரம்' கொண்டாடத்திட்டமிட்டுள்ளது.

இதனையொட்டிவடமாகாண கைத் தொழிற்சாலைகள் பிரிவு யாழ். றொட்டறிக் கழகத்துடன் ஒன்றிணைந்து இதுசார்ந்த கருத்தரங்குகளையும் ஒருசில போட்டிகளையும் நடாத்த உத்தேசித்துள்ளது.

தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் சம்பந்தமான விடயங்களை எடுத்துக்காட்டும் கட்டுரைப்போட்டி, சுவரொட்டிப்போட்டி முதலியனவும் நடைபெறவிருக்கின்றன.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் நாடகங்கள் கொழும்பில் நடைபெறும் இறுதித் தேசியப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப்பெறும்.

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, தொழிற்சாலைகளில் பெண்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உற்பத்தியில் ஏற்படும் விளைவுகள் ஆகியன கட்டுரைத் தலைப்புக்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

[அ]

## யாருடையது

சுண்டிக்குளியைச் சேர்ந்த திரு. எஸ் இஞானராசா என்பவர் ஒரு மூக்குக் கண்ணாடியை திருநெல்வேலிச் சந்தியில் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஐக்கியத்தைக் குலைக்காவண்ணம்

# பிரதேச சுயாட்சி!

## தமிழர் பிரச்னைக்கு கம். கட்சியின் திட்டம்

### 40 ஆண்டு நிறைவை யொட்டி செயலாளர் அறிக்கை

[கொழும்பு]

"தேசிய ஐக்கியத்துக்காகவும் இனவாதத்திற்கு எதிராகவும், பிற ஜனநாயக விரோத மற்றும் பிரிவினைப் போக்குகளுக்கு எதிராகவும் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி நடத்தி வரும் போராட்டம் விரிவான ஆதரவைப் பெற்றுள்ளது" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும், அதன் வெளிவிவகாரச் செயலாளருமான திரு டி. இ. டபிள்யூ குணசேகரா இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் நாற்பதாம் ஆண்டு நிறைவையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் கூறுவதாவது: தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, நாட்டின் ஐக்கியத்தைக்குலைக்காத வண்ணம் பிரதேச சுயாட்சி மூலம் இந்த உரிமையை அமுல் செய்வது பற்றிய கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வது மூலம் தமிழ்மக்களின் பிரச்னைக்கான தீர்வை இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி முன்வைத்துள்ளது. இது தமிழ் மக்கள் மத்தியிலும் இடதுசாரி இயக்கத்திலும்பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது.

### சர்வகட்சி மாநாடு

இப்பிரச்னைக்கு இராணுவ மற்றும் அரசாங்க வன்முறை மூலம் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைக் கைவிட்டு, அரசியல் பேச்சுவார்த்தைமூலம் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணவும், தமிழ்மக்களது ஸ்தாபனங்களையும் உள்ளடக்கிய சர்வகட்சி மாநாட்டைக் கூட்டவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அதுபோலவே, ஐந்துலட்சத்துக்கும் கூடுதலான தமிழ் தோட்டத்தொழிலாளர்களின் நாடற்ற நிலைமைக்கு முடிவு கட்டுவதற்காகப் போராடுகின்றது. அவர்களுக்கு ஏனைய பிரஜைகளுக்கு உள்ள உரிமைகளையும் இலங்கைப் பிரஜைகளாக அவர்கள் மாறும் வாய்ப்பையும் வழங்கவேண்டுமென்று கோருகிறது.

கடந்த 40 ஆண்டுகளில் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி பல சிக்கலான நிலைமைகளில் செயற்பட்டுவந்துள்ளது. இதில் தனிப்பட்ட குறிப்பிட்ட சில ஆண்டுகளே அரசாங்கத்தில் இருந்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி தனது கலிமையையும், திறமையையும் ஆராயவும், அது இழைத்த தவறுகளை ஒப்புக் கொண்டு திருத்திக்கொள்ளவும் முடிந்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி, ஜனநாயகச் சக்திகளின் ஒற்றுமைக்கான போராட்டத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது தேசியக்கொள்கையின் திட்டவட்டமான துறைகளிலான தீர்வுக்கு இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் பங்களிப்பு நன்கு பிரசித்தம் வாய்ந்ததாகும்.

பதினெட்டு வயதில் வாக்களிக்கும் உரிமையைப் போராடிப் பெற்றது கம்யூனிஸ்ட்கட்சியே. தொழில் மயம், நீர்ப்பாசனம், ஜலமின் அபிவிருத்தி, விவசாயம் போன்றவற்றின் பிரச்னைகளுக்கும் அது தீர்வுகளைச் சமர்ப்பித்தது.

விரிவாகச் சொன்னால் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியால் முன் வைக்கப்பட்ட தேசிய, சமூகமுன்னேற்றத்துக்கான பல முக்கியமான கொள்கைகள் பொதுவாக ஏற்கப்பட்டுள்ள கொள்கையாக மாறியுள்ளது.

கடந்த நான்கு தஸாப்தங்களைப் பின்னோக்கிப் பார்க்கும் போது இக்காலகட்டத்தில் பெரும் போராட்டங்களை நடத்திய பெருமையும், அதில் முன் அணியில் இருந்த பெருமையும் எமது கட்சிக்கு உண்டு.

அரசியல் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக 1947-ம் ஆண்டில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தமும், 1953-ம் ஆண்டில் ஹர்த்தாலும் இதில் முக்கிய இடங்களை வகிக்கின்றன சோஷலிச நாடுகளுடனும் பிற எல்லைப்புற ஏகாதிபத்திய விரோத நாடுகளுடனும் நட்புறவை வளர்ப்பதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பெருமிதக் கொள்ள முடியும் ஜனநாயக, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முன்னேற்றத்தையும், சுரண்டல்களுக்கு எதிரான போராட்டத்தையும் அது ஊக்குவித்துள்ளது பொருளாதாரத்தில் பொதுத் துறையில் விஸ்தரிப்புக்காகவும், வெகுஜனங்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காகவுமான போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய இறைமையைப் பாதுகாக்கவும், ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்தைச் சாதிக்கவுமான எமது மக்களின் போராட்டங்களை சமாதானத்துக்காகவும் இந்து மாகடலை சமாதான மண்டலமாக்குவதற்குமான உலகப் போராட்டத்துடன் இணைப்பதன் மூலம் சமூக முன்னேற்றமானது சமாதானத்தை உலக மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் பேணிக் காப்பதுடன் இணைந்துள்ளது என்பதை கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கையின் சமகால இடதுசாரி மற்றும் சோஷலிஸ இயக்கத்தின் பிரதமரான காலஞ்சென்ற டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கஉறவினால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மக்களின் போராட்டங்கள் மூலம் பெற்றுள்ள 40 ஆண்டுகால அனுபவம் மூலம் மார்க்ஸிய-லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசிய கோட்பாடுகளின் வழிகாட்டுதல் மூலமும் தனது கடமையை வெளரவத்துடன் நிறைவேற்றும் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

## 3-ம் வகுப்புவரை மட்டுமே இனிமேல் 'பிஸ்கட்'

(மானிப்பாய்)

பாடசாலைகளில் இதுவரை பாலர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த பிஸ்கட் இனிமேல் 3-ம் வகுப்புவரை மட்டுமே வழங்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிஸ்கட் விநியோகிக்கப்படாத சில பாடசாலைகளுக்கும் இந்தமுறை பிஸ்கட் விநியோகிக்கப்படுமெனத் தெரியவருகிறது. (அ)

யாழ். காங்கேசன்துறை

# இரு புதிய 'கடுகதி' பஸ்சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் ஊடாக காங்கேசன்துறை வரை இரண்டு புதிய கடுகதிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்சேவை ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை காங்கேசந்துறையிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும், ஒரே சமயத்தில் புறப்படும்.

யாழ்ப்பாண டிப்போ அத்தியட்சகர் திரு. உ. மகாலிங்கம், பிரயாணிகளின் வேண்டுகோளை தொடர்ந்து பரீட்சார்த்தமாக இந்த கடுகதி பஸ் சேவையை ஆரம்பித்தார் இந்தசேவை பிரயாணிகளுக்கு போதிய பலனளித்ததை தொடர்ந்து மேலும் இரு கடுகதி சேவைகளை ஆரம்பிப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்த கடுகதிபஸ் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி மணித்தியாலம் ஒரு சேவை வீதம் தினம் 12 சேவை நடாத்தப்பட்டு மாலை 5-30 மணிக்கு முடிவடையும்.

காங்கேசன்துறையிலிருந்து காலை 6-30 மணிக்கு புறப்பட்டு மணித்தியாலம் ஒரு சேவைவீதம் 10 சேவை நடாத்தப்பட்டு மாலை 4-30 மணிக்கு முடிவடையும்.

கடுகதிபஸ்கள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, துர்க்கா ஆலயம், மல்லாகம், சுன்னாகம், மருதனாமடம், இணுவில் ஆஸ்பத்திரி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, நாவலர் சந்தி, யாழ். பஸ்நிலையம் ஆகிய இடங்களில் நிறுத்தப்படும். (௧)

## 200 வீடுகள் தீக்கிரை

(திருகோணமலை)

திருகோணமலையில் கடந்த ஒரு மாதகாலத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான 200 வீடுகள் நேற்றுமுன்தினம் வரை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திருமலையில் வன்செயல் சம்பவங்கள் கடந்த ஜூன் 3ம் திகதி ஆரம்பமாகின.

# "உடைமைகளை இழந்து உடுத்ததுணியுடன் 6 நாட்கள் நடந்து வந்தேன்"

## திருமலையிலிருந்து வந்தவர் கூறும் 'கண்ணீர்க் கதை'

— நமது நிருபர் —

(யாழ்ப்பாணம்)

கொந்தளித்துக்கொண்டிருக்கும் திருகோணமலையில், உடைமைகளை இழந்து உடுத்த துணியுடன், உணவு உறக்கமின்றி, காட்டுப்பாதைவழியாக 6 நாட்கள் நடந்து அலி ஜின்னா என்ற 36 வயது இளைஞர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் அவர் கூறிய கண்ணீர் கதையை பலர் கூட்டமாக நின்று அனுதாபத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அவரது பெற்றோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் அவர்கள் கரைப்பற்றில் 1945ம் ஆண்டளவில் குடியேறினார்கள். அவர்களுக்கு பிறந்த ஏகபுத்திரன்தான் அலிஜின்னா. பாகிஸ்தான் தனிநாடாக பிரிந்தகாலம் இவர் பிறந்ததால், அப்பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும்.

கட்டைசாமிட்டமான உடற்கட்டைக் கொண்ட அந்த இளைஞர் உணர்ச்சிவசப்பட்டு, கண்ணீர் வழிந்தோட சோக சம்பவங்களை விபரித்தார்.

பெற்றோரைப் பறிகொடுத்த பின் அனாதையானார். திருமலை அவரை சிறுவனாக வரவேற்று வாழ்வளித்தது. அங்கு நெசவாளராக பணியாற்றினார்.

திருமலை பள்ளிவாசல் வீதியில் ஒரு அறையை வாடகைக்கெடுத்திருந்தார். சம்பவதினம் அந்த அறை தீக்கிரையானது. அறைமட்டுமல்ல, அங்கிருந்த அவரின் 50,000 ரூபா பணமும் மற்றும், உடைகளும், தீக்கிரையானது.

பணத்தை கொள்ளையடித்துவிட்டு தீமூட்டினார்களா? அல்லது பணத்தோடு தீமூட்டினார்களா? என்பது தனக்கு தெரியாதென்றார்.

ஒருமாத காலமாகவே திருமலையில் பதட்டநிலை காணப்பட்டது. அங்குமிங்குமாக வன்முறை சம்பவங்கள் நடந்தது. ஆனால் கடந்த ஒரு வாரமாக வேஉச்சக்கட்டத்தை அடைந்தது என்றார்.

தாக்குதலை நடத்தியது திருமலையைச் சேர்ந்தவர்களா என்று கேட்டேன்.

இல்லை எல்லாம் புதிய முகங்கள் வேறு இடங்களிலிருந்து வந்து அங்கு முகாமிட்டுள்ளார்கள்.

ஊரடங்கு நேரத்திலா சம்பவங்கள் நடக்கிறதுஎன்று கேட்டேன்.

ஊரடங்கில்தான் அவர்கள் வீதிகளில் ஆயுதப் படையினர் முன்னிலையிலும்கூடசர்வசாதாரணமாகத்திரிகிறார்கள். ஆனால் தமிழர், முஸ்லிம்கள் இந்தியத் தமிழர்கள் ஊரடங்கில் வீதிகளில் தலைகாட்டமுடியாது என்றார்.

'எப்படி அவர்கள் வருகிறார்கள்?'

வாகனங்களில் கத்திகள், குண்டுகள் துப்பாக்கிகளுடன் வருகிறார்கள். தமிழர், முஸ்லிம்களைக்கண்டால் தாக்குகிறார்கள் என்றார்.

'தமிழர் முஸ்லிம்கள் வீடுகள் எப்படி அவர்களுக்குத் தெரிகிறது என்று கேட்டேன்.

அங்குள்ளவர்கள் தான், வீட்டை அடையாளம் காட்டிவிடுகிறார்கள் என்றார்.

பச்சிளங் குழந்தைகளைக்கூட ஈவிரக்கமின்றி வெட்டிவிடுகிறார்கள். என்று சொல்லிஅழுதார் அவர்.

திருமலை நகரத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், தமிழரும், முஸ்லீம்களும் அச்சத்துடன் வாழ்கின்றார்கள்என்று கூறிய அவர்பல குடும்பங்கள் காட்டுப் பாதை வழியாக மட்டக்களப்புக்குப் புறப்பட்டுள்ளார்கள் என்றார்.

போக்குவரத்து வசதியிருந்தால் பலர் யாழ்ப்பாணம்வர விருப்பம் கொண்டுள்ளார்கள் என்றும் கூறினார்.

ஒருவேளை இத்தாக்குதல் ஓரளவு குறைந்தாலும், எதிர்காலத்தில் மோசமாக இருக்கும், என்ற அச்சம், அங்கு வாழும், தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் நிலவுவதாகவும். அவர் தெரிவித்தார்.

உயிரைக் காப்பாற்ற யாழ்ப்பாணம் செல்வதுதான் ஒரே வழி என்று அங்கு பலர் கூறியதாகவும் சொன்னார்.

உங்கள் அடுத்த திட்டம் என்ன? என்று கேட்டேன்.

'தமிழ் நாடு செல்லவேண்டும் என்பதுதான் என் விருப்பம். அங்கிருந்து உதவிகளிற்தான் நிச்சயம் செய்வேன். தமிழருக்கும், முஸ்லீம்களுக்கும் இங்கு நடக்கும் அட்டூழியங்களை. அங்குள்ள மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்றார்.

திருமலையை விட்டுப்புறப்பட்டதற்குக் காரணம் என்ன? இது என் கேள்வி.

என் இருப்பிடம் தீ பற்றி எரிந்ததைத் தொடர்ந்து ஒரு இனந்தெரியாத ஆவேசம் பிறந்தது. உணர்ச்சிவசப்பட்ட நான் இதற்குக் காரணமாக இருந்த இருவரைப் பலமாகத் தாக்கிவிட்டேன். என்னைத் தீர்த்துக்கட்டப் பல இடங்களிலும் தேடினார்கள். இதனால்தான் திருமலையை விட்டுப் புறப்பட்டேன் என்றார்.

திருமலை நகரத்தில் எல்லாக் கடைகளையும் எரித்துவிட்டார்களா? என்று கேட்டேன்.

இல்லை தமிழர் முஸ்லீம்களின் கடைகளையும், வீடுகளையும் தான் எரிக்கிறார்கள் என்றார்.

திருமலை நகரத்தைச் சுற்றியுள்ள பல குடியேற்றத் திட்டங்களில் வாழும், தமிழ் பேசும் மக்கள் உடைமைகளை இழந்து திருமலை நகரை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்களென்றும், பலபொது இடங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளார்களென்றும் அவர் தெரிவித்தார்.

[7-ம் பக்கம் பார்க்க]


நிரந்தர வைப்புகட்கு

36% வட்டி வழங்கும்

தமிழர் நிதியம்

நிதி நிறுவனம் தரும்
எல்லோருடைய வரவுக்கும் சக்திக்கும் ஏற்ற
புதிய நாளாந்த, மாதாந்த சீட்டுப் பிரிவுகள்
தொடங்கும் 1-வது ஏலத் திகதி 20-7-83

| சீட்டு பிரிவு இனம் | நாள்தோறும் செலுத்தும் தொகை | மாதாந்தம் செலுத்தும் தொகை | காலம் | ★ சீட்டு மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| OL | 200/- | 4000/- | 25 மாதம் | 1,000,00/- |
| HL | 100/- | 2000/- | 25 மாதம் | 50,000/- |
| QL | 50/- | 1000/- | 25 மாதம் | 25 000/- |
| TT | 20/- | 400/- | 25 மாதம் | 10,000/- |
| SF | 15/- | 300/- | 25 மாதம் | 7,500/- |
| FD | 10/- | 200/- | 25 மாதம் | 5,000/- |

✶ ஏலப் பங்குப் பணம் உட்பட்ட தொகைகள்
தமிழர் நிதியம் மேலும் பல இணையற்ற ஆதாயங்களை
உங்கட்கு வழங்குகின்றது
✶ குறித்த நேரத்தில் தேவைக்குப் பணம் ✶ பகிரங்க ஏலம்
✶ ஓராண்டிற்குப் பின் கடன் வசதி
✶ நம்பிக்கையான சேவை

தங்கச் சுரங்கம் அதிர்ஷ்ட முதலீட்டு திட்ட 2-7-83ம் திகதிய
பரிசு சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம
1. திருமதி. ரி. இலங்கேஸ்வரன் — 000330
42, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
2. திரு. பொ. சிவஞானசுந்தரம் — 000917
அம்பகாமம், மாங்குளம்

மேலதிக விபரங்கட்கு :
TAMIL FUNDS AND FINANCE LIMITED
140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
NAVALAR ROAD, JAFFNA.
தொலைபேசி : 22437

[மனோகரா சினிமா அண்மையில்]
Regd. No. PVS 8483



தமிழ் அகதிகள்
புனர்வாழ்வுக்கழகம்

கொழும்பு முகவரி:
75, வாட்பிளேஸ்,
கொழும்பு - 7.

யாழ். கிளை
200, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திருகோணமலையில் கதியற்றுத்தவிக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உடன் உதவி அளிக்க எங்கள் சார்பில் நிதி திரட்டுவதற்கு பின்வருவோருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. விசுவலிங்கம் இணைப்பொருளாளர்,
தாவடி, கொக்குவில்.

திரு. மா. கனகராஜநாயகம்
200, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இக்குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிக்க உடனடியாக முன்வாருங்கள்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்.

7834

பரு. ரியூட்டறி மாணவி

# கமலம் கொலை வழக்கு தொகுப்புரை ஆரம்பம்!

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ரியூட்டறி மாணவி கமலம் கொலைவழக்கின் தொகுப்புரை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கில் பருத்தித்துறை ரியூட்டறி மாணவி கமலத்தை கொலைசெய்ததாகவும் அவரின் நகைகளைக்கொள்ளையடித்ததாகவும் ராஜன் அல்லது ராஜ்குமார்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அரசதரப்பினர் சாட்சிகளை படித்துக்கொண்டதை தொடர்ந்து எதிரிதரப்பில் சாட்சியங்களை அழைக்காமலும் எதிரியின் சாட்சியம் அளிக்காமலும், எதிரி தரப்பில் வழக்கை முடித்துக்கொண்டனர்.

சிரேஷ்டசட்டத்தரணி திரு. ஜே. ஜெயக்குமார் நேற்றுமுன்தினம் பகல் 3 மணிக்கு தொகுப்புரையை ஆரம்பித்தார்

[8-ம் பக்கம் பார்க்க]

---

சாவகச்சேரியில்

## 1666 கூட்டணி உறுப்பினர்!

[சாவகச்சேரி]

சாவகச்சேரித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினராக 1666 பேர் சேர்ந்துள்ளனர். இவர்கள் தொகுதியில் உள்ள 34 கிளைகளில் அங்கம் வகிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகக் கூடுதலான த. வி. கூ. உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்ட வகையில் சாவகச்சேரி முதன்மை ஸ்தானம் வகிப்பதாகத், தொகுதி அமைப்பாளர் திரு ஏ. கே. இராமலிங்கம் கூறினார். [க]

---

துப்பாக்கிமுனையில்

## மதுபான விற்பனை நிலையத்தில் கொள்ளை!

(மாவிட்டபுரம்]

மதுபான விற்பனவு நிலையத்திலிருந்து துப்பாக்கி முனையில் ரொக்கப்பணம் 6300 ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையிலுள்ள மதுபான விற்பனவு நிலையத்திலேயே இக்கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக அங்கு கடமையிலிருந்த விற்பனையாளர் ஆறுமுகம் ஸ்ரீதரன் காங்கேசன்துறை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரு சைக்கிள்களில் நான்கு இளைஞர்கள் வந்ததாகவும் இருவர் வெளியே நிற்க இருவர் மதுவிற்பனை நிலையத்திற்குள் வந்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும், பின்னர் லாச்சியினுள் 6300 ரூபாபணத்தை கொள்ளையடித்துக்கொண்டு நான்கு இளைஞர்களுமாகசென்றுவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து காங்கேசன்துறை பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

---

யாழ். நகர மண்டபத்தில்

## தமிழ் இளைஞர் பேரவை பேராளர் மகாநாடு ஜூலை 17ல் நடைபெறும்

(பச்சிலைப்பள்ளி)

தமிழர் விடுதலைக் கூட்டணி மாநில மாநாட்டிற்கு முன்னர் தமிழ் இளைஞர் பேரவையின் பேராளர் மாநாடு யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

இப்பேராளர் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளன

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாடு இம்மாதம் 23-ம், 24ம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னர் இம்மாதம் 17-ம் திகதி யாழ் நரமண்டபத்தில் இளைஞர் பேரவையின் பேராளர் மாநாடு நடத்தப்படவுள்ளது.

இப்பேராளர் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர்களும் கலந்து கொள்வார்கள் என அறியப்படுகிறது. (க)

---


## உங்கள் முதலீட்டினை "ஷப்ரு"வில் செய்யுங்கள்

இதனால்

பொருளாதார முன்னேற்றமும் நல்வாழ்வும் உண்டு.

இதற்கும் மேலாக "ஷப்ரு" எல்லா இல்லங்களிலும் நிலைத்து விட்ட நிரந்தர மான பெயர்

ரி. வியும் மற்றும் வீட்டுப் பாவனை பொருட்களையும் தவணை முறை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். எதற்கும் எமது ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். நாடுங்கள்.

"ஷப்ரு"
61, நியு புளர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொ. பேசி: 589310

"ஷப்ரு"
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 22073


---

## ஜனாதிபதிவிருது பெற்ற 12 மாணவர்கள்

(அரியாலை)

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற சாரணர் விழாவில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த 12 சாரணர்கள் ஜனாதிபதி விருதுகளைப்பெற்றனர்.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரதம சாரணர் என்ற முறையில் கலந்து கொண்ட இவ்விழாவில் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் ஜி அருச்சுனா, எஸ். சிவகணேஷ், கொக்குவில் இந்துக் கல்லூரிமாணவன் எஸ். சத்தியானந்தன், யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் ஏ. திருக்கேதீஸ்வரன், ரி. அசோகன் கி, ஜெயசீலன், எஸ், சரவணபவன், ரி. கௌரீசன், ஏ மோகனேஸ்வரன், கே. ஜீவமோகன். மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் ரி. சுகிசோரம், சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி மாணவன் எஸ், சீனிவாசகம் ஆகியோர்கள் ஜனாதிபதியிடமிருந்து விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

---

## "பொருளாதார சுபிட்சம் ஏற்படுவதற்கு வழி"

[சாவகச்சேரி]

"இந்நாட்டில் வாழுகின்ற இரண்டு தேசிய இனங்களும் ஒன்றுக்கொன்று சமஉரிமையோடு வாழ்ந்தால் மட்டுமே நாட்டில் அமைதியும் சமாதானமும் பொருளாதாரசுபிட்சமும் ஏற்படமுடியும் இந்நிலையில் நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை இனமாகியதமிழ் பேசும் இனத்தின் அடிப்படை உரிமைகள் பல மறுக்கப்பட்ட காரணத்தினால் இன்று பிரிவினைக்கோஷம் உருவாகி அக்கோஷம் வலுப்பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே இக்கட்டத்தில் இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசு உடனடியாக இதுவிடயத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும்."

என்று சாவகச்சேரியில்கூடிய சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் வடபிராந்தியக் கிளை இயக்கத்தலைவர் திரு. வீ. சு. துரைராஜாதலைமையில் கூடிய போது மேற்கண்டவாறு தீர்மானித்தது.

மேலும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது! இன்றைய அரசு அரசியல்கட்சிகளின் கருத்துக்களுக்கு அப்பால் தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாஷைகளை தெரிந்து கொள்ளுமுகமாக அவர்களிடையே ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தவேண்டும். எனவும் அச்சர்வஜன வாக்கெடுப்பின் அடிப்படையில் உடனடித்தீர்வு காணப்பட்டு இரு இனங்களுக்குமிடையே மீண்டும் ஒற்றுமைசமாதானம் நிலவவழிவகுக்க வேண்டும்". இத்தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதிக்கும் சர்வதேச சமாதான சேவைஇயக்கத்தின் தேசியச்செயலாளர் திரு. சாம்சன் ஜயசிங்காவுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

---

## அலங்காரஉற்சவம்

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம்-பழை-வீமன் காமம்-தயிட்டி அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் வியாழன் ஆரம்பமானது. தொடர்ந்து 25நாட்கள் வெளிவீதிஉலாக் காட்சியும், ஏனைய விசேட நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இவ் உற்சவம் ஜூலை 24ம் திகதி முடிவடையும்.

முற்றிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட இவ்வாலயத்திற்கு சென்ற ஆண்டுகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் 3 நேரப் பூசையும், ஸ்தபன அபிஷேகமும், உள் வீதி உலாக்காட்சியும் இடம் பெற்றுவருகிறது.

இவ்வாலய சங்காபிஷேகம் ஜூலை 11ம் திகதி இடம் பெறும். (சூ)

---

## இளம் பெண்ணுக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

வாலிபர்களுடன் சந்தேகத்திற்கிடமாக நின்று பேசிக் கொண்டிருந்த 20வயது இளம் பெண் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

மயிலிட்டியில் வீதியில் நின்று இரு வாலிபர்களுடன் பேசிக் கொண்டு நின்ற காரைநகரைச் சேர்ந்த மேற்படியுவதியைக் காங்கேசன்துறைப் பொலிசார் அவ்வழியால் வந்த சமயம் கைது செய்தனர்,

யுவதியுடன் வாலிபர்களையும் கைது செய்த பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் யுவதியை ஆஜர் செய்த சமயம் நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு அவரது நடத்தையை ஆராயுமாறு உத்தரவிட்டார். வாலிபர்கள் இருவரும் பிணையில் விடப்பட்டனர்.

---

## யாருடையது?

யாழ் சிவன்கோவில் வடக்குவீதியைச்சேர்ந்த திரு எஸ், தினகரன் என்பவர் மோட்டார்வாகனச்சாரதி லைசென்ஸ் ஒன்றினை யாழ். மானிப்பாய் வீதியில்கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

---

5ம் வகுப்புவரையுள்ள பாடசாலையில்

## 10 வருடமாக ஒரே ஒரு ஆசிரியர் பணியாற்றுகிறார்!

(பச்சிலைப்பள்ளி)

ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையொன்றில் 10 வருட காலமாக ஓர் ஆசிரியர் மட்டுமே கடமையாற்றி வருகிறார்.

மாணவர்களின் தொண்ணூறு வீதத்தினர் றோமன்கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அங்கு றோமன் கத்தோலிக்க பாடத்தைப் போதிக்கவும் ஆசிரியர் ஒருவருமில்லையாம்.

பருத்தித்துறை கிழக்கிலுள்ள மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலேயே இந்நிலை காணப்படுகிறது. இப் பாடசாலையில் பாலர்வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை வகுப்புகள் உள்ளனவாம். அதே நேரத்தில் ஆங்கிலம் போதிக்கவும் ஆசிரியர் இல்லையாம். இதனால் இப் பகுதியில் உள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் குறைபட்டுக்கொள்கிறார்கள், [க]

---


## ரி. வி. கேம்ஸ்

பெரியவர்கள், இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவருக்கும் பொழுது போக்கிற்கு இருபது விதமான ரி. வி, விளையாட்டுக்கள் 25 சதம், 50 சதம், ஒரு ரூபா

முற்றும் குளிரூட்டப்பட்ட நியூவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்இல் உங்கள் முப்பரிமாண சக்தியைப் பெருக்கிக்கொள்ள ரி. வி. விளையாட்டுக்கள்.

## நியுவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தர்மபுரம் பலாத்கார வழக்கு:

# "கணவனை சாராயம் வாங்கிவர எதிரி காசுகொடுத்து அனுப்பினர்"

(கிளிநொச்சி)

எதிரி எனது கணவனை சாராயம் வாங்கி வருமாறு பணம் கொடுத்து அனுப்பியபின் எனது மகனை பயமுறுத்தி விட்டு எனது கையைப்பிடித்து இழுத்துச் சென்று எனது சம்மதம் இல்லாமலே பலாத்காரம் செய்தார்.

தர்மபுரம் பலாத்கார வழக்கில் சாட்சியமளிக்கையில் 35 வயதான குடும்பப்பெண் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 82 டிசம்பர் 4-ம் தேதி தர்மபுரத்தில் 35 வயதான குடும்பப்பெண்ணை பலாத்காரம் செய்ததாக அதே இடத்தை சேர்ந்த சுப்பையா செல்லம் [40 வயது] என்பவருக்கெதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நீதவான் கே. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

எதிரிசார்பில் சட்டத்தரணி அசோகநாதனும் பொலிஸ் தரப்பில் நீதிமன்ற சார்ஜன் இ. திருவிளங்காமும் எம். சந்த குமாரும் வழக்கை நடத்தினர்கள்.

குடும்பபெண் சாட்சியத்தில் கூறியதாவது. சம்பவதினம் இரவு 7-30 மணியளவில் எதிரியான செல்லம் எங்களது வீட்டிற்கு வந்தார். எனது கணவனிடம் 20 ரூபாய் கொடுத்து சாராயம் வாங்கி வருமாறு அனுப்பிவிட்டுஎனது மகனையும் பயமுறுத்தி விட்டு எனது கையைப் பிடித்து எனது சம்மதமில்லாமலே இழுத்துச் சென்று பலாத்காரம் செய்தார் அதன்பின் என்னை பயமுறுத்தி ஒருவருக்கும் இதுபற்றி தெரியப்படுத்தக் கூடாது எனவும் கூறிச்சென்றார். அதன் பின் எனது கணவன் வந்து என்ன நடந்தது? எனக்கேட்டார். நான் நடந்தவற்றைக் கூறினேன். மறுநாள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டேன்.

எதிரிதரப்பு தொகுப்புரை வழங்கவென இம்மாதம் 18ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

## மூலிகைத் தோட்டம் அமைக்க நடவடிக்கை

[சாவகச்சேரி]

வடபிரதேசத்தில் சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினர் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத மூலிகைத் தோட்டத்தினை அமைப்பதற்கான வெற்றுக் காணியினை ஒருவாரகால சிரமதான மூலம் திருத்தவுள்ளனர்.

இச்சிரமதான பணியின் போது சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினர் பல நாட்டுத் தொண்டர்களும் பங்குகொள்ள இருக்கின்றனர்.

இம்முகாமிற்கான ஆரம்ப வேலைகளை சர்வதேச சமாதான சேவை இயக்க வடபிரதேசக் கிளை உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. (க)

## 6 நாட்கள் நடந்து...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்குச் சட்டத்தினுல், மக்களுக்குப் பாதுகாப்பு இல்லையா? என்று கேட்ட போது, ஊரடங்குச் சட்டத்தின்போதுதான் மோசமாக நடப்பதாகவும், ஊரடங்கு அமுலில் புரிவோருக்குப் பாதுகாப்பளிப்பதாகவும் அவர் சொன்னர்.

உணவுப் பொருட்கள், காய்கறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், விலைகள் கூடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் இவற்றை வாங்குவதற்கு, மக்கள் வெளியில் செல்லப் பயப்படுவதாகவும் கூறினர்.

எப்பொழுது திருமலையை விட்டுப் புறப்பட்டீர்கள்? என்று கேட்டேன்.

அவர் தொடர்ந்தார் "கடந்த திங்கட்கிழமை என்னை வளர்த்து ஆளாக்கிய திருமலைத் தமிழ் மண்ணில் இருந்து புறப்பட்டு காட்டுப் பாதை வழியாக உணவின்றி உறக்கமின்றி நடந்து வந்தேன். வழியில் எவரையும் சந்திக்க அஞ்சினேன். 5 நாட்களின் பின் வவுனியாவை வந்தடைந்தேன். அங்கு கடைத் தெருவில் எனக்கு நடந்தவற்றைக் கூறினேன். இரக்கம் கொண்ட தமிழ் வர்த்தகர் ஒருவர் 100 ரூபா தந்தார். பின் அங்கிருந்து ரயிலில் புறப்பட்டு, யாழ்ப்பாணத்தை நேற்று முன்தினம் மாலையில் வந்தடைந்தேன். யாழ் ரயில் நிலையத்தில் இறங்கி ரயில் பாதை வழியாக நடந்துசென்றேன். கொக்குவில் அடைந்த போது 'ரயிலைக் கொளுத்தி விட்டார்கள்' என்று கூறினர்கள். பயத்தினுல் அன்றிரவு ஒரு தமிழர் வீட்டில் தங்கி விட்டு நேற்றுக்காலை அங்கிருந்து புறப்பட்டு, யாழ் நகருக்கு வந்தேன். பின் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியைக் கேட்டறிந்து இந்த சந்திக்கு வந்தேன் என்றார்.

இறுவயதில் பெற்றோரையிழந்து, என்னை வாழ்வளித்த திருமலைத் தமிழ் மண்ணை இழந்து அகதியாகி, வேதனைக்கு மத்தியிலே, விரக்தியின் எல்லையிலே என் வாழ்வை முடித்துக்கொள்ள, ஐந்து சந்தியிலே என் உடலில் மண்ணெண்ணை ஊற்றித் தீக்குளிக்க முயற்சித்த போது அங்கு நின்றவர்கள் என்னைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். என்னை அன்போடு, ஆதரவோடு அழைத்து உணவளித்தார்கள். என்முடிவு கோழைத்தனமானது என்று அறிவுரை கூறினர்கள். ஆதலால் என் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன் என்ற பெருமூச்சுடன் கண்ணீர்க் கதையை முடித்த போது அங்கு நின்றவர்கள் கண்கள் கலங்கியிருந்தன. (ஏ)

## இன்று நடக்கும் உதைபந்தாட்டப் போட்டி

[அல்வாய்]

காங்கேசன்துறை வெற்றிக் கிண்ண இறுதிப்போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். நெல்லியடி சனசமூகநிலையமும், வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகமும் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன. (வி)

## யாழ். நகரில்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் என். கதிர்காமநாதன் தலைமையில் சார்ஜன் டீ. ஜி. மாசிலாமணி, கான்ஸ்டபிள்கள் வி. வாமதேவன் என். கனகலிங்கம், பி. அமிர்தநாதர், ஏ. ஜேசெப், எச். எம். அபேவர்த்தன ஆகியோர் அகௌடி வியாபாரிகளை அப்புறப்படுத்தினர். (மா)


ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
ஜெய்சங்கர்
துணிவே துணை
(புதிய பிரதி)

கடைசி 5 தினங்கள்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா
ஜெமினி - சாவித்திரி
சரஸ்வதிசபதம்
(ஈஸ்மன்ட் கலர்)
அடுத்த வெளியீடு!
பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
9-30
பிரதாப்—சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
மணளனே
மங்கையின் பாக்கியம்

Regal [Jaffna] Daily 10-30, 2-30, 4-45, 7-00
2nd — 4th Roger Moore in
"The Fiction Makers"
[Action packed - thrill color]
Coming soon 'GIRL FROM INDIA'

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த - 7வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00.
(யாழ். நகர்)
BRUCE LEE'S (Karate Film)
Exit the Dragon,
Enter the Tiger

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) 2வது வெற்றி மாதம்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
His Partner brutally murdered......
His girl friend executed......
SEAN KANE is out for VENGENCE
CHUCK NORRIS in
An Eye For An Eye

சாந்தி யாழ். 10.30, 2.30, 6.30 மட்டும்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
ஜனத்திரள் நிறைந்த 52-வது வெற்றித்திருநாள்
பாலாஜியின்
சிவாஜி
லட்சுமி
மனோரமா
தேங்காய்
தியாகம்
ஈஸ்ட்மென்
வண்ண
சித்திரம்
- மாதர்கூட்டம் திரண்டு வருகிறது -


யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்






எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ளவும் புதிய மணிக்கூடுகளை
வாங்கிக்கொள்ளவும்
டில்கா
வாச்வேக்ஸ்


DILKA WATCH WORKS OPPOSITE BUSSTAND
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
யாழ்ப்பாணம். போன் 24174

அறிமுக
மலிவு விற்பனை
புதிய AGFA கசற்
விலை 30/-
நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக்
கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம்.



கோண்டாவில் ரயில் நிலையத்தில் தீக்கிரையான 'யாழ் தேவி' ரயில் பெட்டிகளும் அதன் ஆசனங்களும் எரிந்து உருக்குலைந்து காணப்படுகின்றன. யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு சு. நடராசா எரிந்த ரயில் பெட்டிகளைப் பார்வையிடுகிறார்கள்.

(படம்: 'தேவா'

# வவனியாமாணவன்

## ராணுவத்திடம் ஒப்படைப்பு!

(வவனியா)

வவனியா தமிழ் மகாவித்தியாலயமாணவர் ஒருவரை இராணுவத்திடம் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

வவனியாவில் விவசாய இலாகாவுக்கு உரித்தான ஜீப் வண்டி கடந்த ஏப்ரல் மாதம் இனம் தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

இது தொடர்பாக வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் உயர்தரவகுப்பு மாணவன் சிற்றம்பலம் சந்திரகுமார் 19 வயது கைது செய்யப்பட்டு இருந்தார்.

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருந்த குறித்த மாணவன் மேல் விசாரணைக்கு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குருநகர் இராணுவ முகாமுக்கு இவர் கொண்டு செல்லப்பட்டு இருக்கலாம் என அறியப்படுகிறது.

### சற்றுமேறிவியூ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுவதற்கான தகுதி வாய்ந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார் என வானொலியில் ஒலி பரப்பட்ட செய்தியொன்றில் தெரிவிக்கப்பட்டது.

### கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் இன்று மணவாளக்கோல திருக்கல்யாணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருச்செந்தூர்ப்பெருமானுக்கு காலை 5-30 மணிக்கு சங்காபூஜை. 10-00 மணிக்கு சங்காபிஷேகம். 10-30 மணிக்கு ஷண்முகார்ச்சனை [லக்ஷார்ச்சனை பூர்த்தி] 11-00 மணிக்கு தாராஹோமம் நடைபெறும். நண்பகல் 12-00 மணிக்கு மாகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.

இன்று மாலை 5 மணிக்கு பூஜையைத் தொடர்ந்து மணவாளக்கோல திருக்கல்யாணமும் நடைபெறும். இரவு 6-30 மணிக்கு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதப்பெருமான் வள்ளி தேவசேனா சமேத ரதப் பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வருவார்.

### கமலம் கொலை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி ஜி. ஜெயக்குமாரை தொடர்ந்து எதிர்தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் தொகுப்புரை நிகழ்த்துவார்.

இவ்வருடம் மே 9ம் தேதி ஆரம்பமான இவ் வழக்கில், டாக்டர் என். சரவணபவானந்தன், டாக்டர் எஸ். கதிரவேலுப்பிள்ளை, திருமதி ஜி. கண்மணியம்மா, திருமதி இ இராஜலட்சுமி, ஆர். பத்மநாதன், ஜெ செகமலர், எஸ். உதயமாலினி, எஸ். சிவஞானசேகரம், ரி. கலையரசன், என் கனகசேகரம், எஸ். சிறிஸ்கந்தராசா, எம் நேசம்மா, ஆர். கனகசபாபதி, ரி. பரமேஸ்வரி, ரி. யோகேஸ்வரி, எஸ். மகேந்திரன், இன்ஸ்பெக்டர் ரி. இரத்தினசபாபதி ஆகியோர் சாட்சியமளித்தனர். (மா-௧)

### துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து கைப்பற்றிக்கொண்டதுடன் பெறுமதியான முத்திரைகளையும் அபகரித்துக்கொண்டு தப்பியோடிவிட்டார்களாம்.

யாழ். பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

### திருமலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது இன்று பிற்பகல் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிற்பகல் 2 மணிக்கு அமுலுக்கு வரும். நாளை ஊரடங்குச் சட்டம் பற்றிய முடிவை கடற்படைத் தளபதி அசோகா டி சில்வா அறிவிப்பார். ஊரடங்குச் சட்டம் பற்றிய முடிவை இனி அவரே முடிவு செய்வார்.

### இதுவரை 17 கொலைகள்

திருகோணமலை பகுதியில் இதுவரை பதினேழு கொலைகள் நடந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஜூலை 5ந்திகதி வன்செயல்கள் ஆரம்பமாகின இந்த ஒருமாத காலத்தில் 200 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

வன்செயல்கள் தொடர்பாக 15 தமிழர்களும், 8 சிங்களவர்களும், 3 முஸ்லிம்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### தமிழர் படுகொலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வீதத்துக்கு மேற்பட்டவை தமிழர்களின் வீடுகள்.

### சிங்களவர் ஒருவர் கூட இல்லை

ஆயிரத்துக்குமேற்பட்டோர் வீடுகளை இழந்து அகதிமுகாம்களில் இருக்கிறார்கள். இதில் ஒரு சிங்களவரும் அகதி முகாம்களில் இல்லை. ஆயுதப் படையினர் தமிழ்ப்பகுதிகளில் தேடுதல்கள் நடத்தி அச்சுறுத்துகிறார்கள் இதை அடுத்து காடையர்கள் தமிழ் மக்களைத் தாக்குவதிலும் வீடுகளைக் கொளுத்துவதிலும் ஈடுபடுகிறார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் பலர் கொல்லப்பட்டும் சொத்துக்கள் அழிக்கப்பட்டுமுள்ள அதேவேளையில் இதில் சம்பந்தப்பட்ட சில சிங்களவர்களே கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

### 80 வீதம் தமிழர்கள்

காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் எண்பது வீதமானவர்கள் தமிழர்கள். குற்றச் செயல்களில் பிடிபடும் சிங்களவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுகிறார்கள்.

பொலிசாரும் ஆயுதப்படையினரும் நிச்சமாக ஒருதலைப் பட்சமாகவே நடந்துகொள்கிறார்கள். ஆயுதப் படைகள் வாபஸ் பெறப்பட்டால், தமிழர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

தமிழர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்வதை ஆயுதப்படையினர் தடுப்பதோடு, காடையர்கள் தமிழர்களைத் தாக்குவதற்குச் சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக்கொடுக்கிறார்கள்.

திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள் போதாது. தயவு செய்து போதுமான அளவு தமிழ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளையும், அவர்களுக்கீழ் பொலிஸ் படையினரையும் அனுப்பி அவர்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்குங்கள். (மா-பெ)

# மரண அறிவித்தல்

## திருமதி கலாவதனி-றிச்சேட்

(பண்டத்தரிப்பு)

திருமதி கலாவதனி றிச்சேட் காலமானார். இவர் S. றிச்சேட் அவர்களின் அன்பு மனைவியும், திரு. A.R தம்பித்துரை [A. R L. Land Registry, Jaffna], காலஞ்சென்ற திருமதி ஜானகிதேவி தம்பித்துரை அவர்களின் அருமை மகளும், சந்திரசேனனின் சகோதரியும், துரைராசா, குமாரதாசா, அற்புர், சுகிர்தரட்ணம் தியாகராஜா, கமலாம்பிகை, சிவப்பிரகாசம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், காலஞ்சென்றவர். தம்பித்துரை, திருமதி லில்லி அருட்பிரகாசம், திருமதி முத்தம்மா ஜொக்கிம், Dr. G. செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் பேத்தியும், சோமசுந்தரம் தம்பதிகளின் மருமகளும், அருள்லிங்கவிநாயகம், அருள் ஜெயசிங்கம், பாலசிங்கம், கீர்த்திசிங்கம், ஜெகசிங்கம் குலசிங்கம், தனசிங்கம், சூரியகுமாரி ஆகியோரின் பெருமகளுமாவார். இறுதிச்சடங்குகள் பற்றிய விபரம் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கீரிமலை றோட், பண்டத்தரிப்பு.

[7831]

## விடுதலை செய்யக்கோரி அமிர் ஜனாதிபதிக்குத் தந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் தமிழீழ விடுதலை அணித் தலைவரையும், செயலாளரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றுகோரி எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"திருகோணமலையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை எதிர்த்து தமிழ் மக்கள் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் ஹர்த்தால் நடத்தும்படி கோரிக்கை விடுத்தமைக்காக டாக்டர் எஸ். ஏ தர்மலிங்கத்தையும், திரு கோவை மகேசனையும் கைது செய்து காவலில் வைத்திருப்பது முற்றிலும் அநீதியான செயலாகும் என்றும் இது அநீதியை எதிர்ப்பதற்குள்ள அடிப்படை உரிமையை மறுப்பதாகும் என்றும் திரு அமிர்தலிங்கம் அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார். (மா)

## சட்டத்தரணி வீட்டின்முன் 'மர்மப் பார்சல்!'

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்கு முன்பாகத் தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட மர்மப் பார்சல் ஒன்று யாழ். பொலிசாரைத் திகிலடையச்செய்துள்ளது.

யாழ். பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி பொத்தேஜவும் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் கிறிதரனும் ஸ்தலத்துக்கு விரைந்து அப்பகுதியில் நிலவிய பரபரப்பைத் தீர்த்துவைத்தனர். அப்பார்சல் தார்க்கப்பட்ட பொழுது, இரு செங்கட்டிகளே மட்டுமே இருக்கக்காணப்பட்டன.

அவ்விடம் வந்த இரகசியப் பொலிசார் குறிப்பிட்ட சட்டத்தரணியை விசாரித்த பொழுது, தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்றும் ஆனால் அண்மையில் நடைபெற்ற இப்பகுதி ஆலய மகாசபைக் கூட்டத்தில் உத்தியோகத்தர் தெரிவு, அப்பகுதியிலுள்ள சிலருக்கு அதிருப்தி ஏற்படுத்தியிருந்ததென்றும் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது (மா)

## வடபகுதிக்கான 'கடுகதி' ரயில்சேவை தற்காலிகமாக நிறுத்தம்!

(கொழும்பு)

கோண்டாவில் ரயில் நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் 'யாழ்தேவி' ரயில் பெட்டிகள் எரிக்கப்பட்டதையடுத்து 'யாழ்தேவி' கடுகதி ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமத் தெரிவித்தார் ஹபரதுவையில் நடந்த கூட்டமொன்றில் அமைச்சர் பேசுகையில் இதனைக் கூறினார். போதுமான அளவுபெட்டிகள் இல்லாமையினால் இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். ரயில் எரிக்கப்பட்டதற்கும் பலத்தகண்டனம் தெரிவித்தார்.

ரயில் பெட்டிகள் எரிந்ததையினால் 5 கோடிரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகவும். இச்சம்பவம் பற்றி விசாரணை செய்ய தூதுக்குழுவொன்று சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அனுப்பி வக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலுள்ள ரயில்வே சமிக்ஞைகளும், பாதைகளும் சேதமடைந்ததை பற்றியும் இக்குழு விசாரணை நடத்தவுள்ளது. (வெ)

### புத்தூரிலும் மற்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாத இளைஞர்கள் பஸ்ஸை மறித்து உட்சென்று துப்பாக்கி முனையில் பஸ் சாரதியையும், நடத்துநரையும், பிரயாணிகளையும் வெளியேற்றிவிட்டு எண்ணெய் ஊற்றி தீவைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டனர்.

பஸ்ஸுக்குள் தீப்பற்றிக்கொண்டதும் பஸ்சாரதி, நடத்துநர், பிரயாணிகள் அவ்விடத்திலுள்ள பொதுமக்கள் ஆகியோர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியால் தீ அணைக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. ராஜலிங்கம் தலைமையில் சென்ற பொலிஸார் பஸ்ஸை பார்வையிட்டனர், பஸ் பொலிஸ் நிலையம் எடுத்துச்செல்லப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (மா)

### வட்டு யாழ் கல்லூரியில் ஹேஸ்ரஸ் வெற்றி

(சங்கானை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று நடந்த மெய்வல்லுநர் போட்டியில் ஹேஸ்ரஸ் இல்லம் [சிவப்பு] முதலிடத்தைப் பெற்று இவ்வருடத்துக்குரிய சாம்பியன் வெற்றிக்கேடயத்தைத் தட்டிக்கொண்டது.

### வடபகுதி ரயில்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெட்டிகளில் மூண்ட தீயினால் ரயில் நிலையத்தின் முன்பக்கமும் சேதமடைந்திருந்தது.

இனந்தெரியாத நபர்கள் புகையிரத நிலையத்துடனான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பின்னரே ரயில் பெட்டிகளுக்குத் தீவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

எரிந்த பெட்டிகள் உருக்குலைந்தநிலையில்கோண்டாவில்ரயில் நிலையத்துக்குசற்று முன்னதாக எடுத்துவிடப்பட்டுள்ளது. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அதிபர்களுக்காக யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under number B. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.